பாதுகாப்பான பயணத்திற்கு புதிய மொபைல் செயலி

சென்னை, ஜூன் 18- பயணிகளின் பாதுகாப்பான மற்றும் திருப்தி யான பயணத்திற்கு தேவையான அனைத்து சிறப்பம்சங்களும் கொண்ட ஈசி டிரைவ் (ணிஞீமி ஞிஸிமிகூஞிணி) எனப்படும் ஒரு மொபைல் செயலியை சென்னை மற்றும் பெங்களூரு நகரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஓட்டுநர், அதோடு கூட டேக்சி ஆகிய இருவரை யும் தனித்தனியே வாடகைக்கு அமர்த்தும் வசதியுடன் கூடிய இந்த செயலி நகரத்துக்குட்பட்ட பயணங்களுக்கு ஒரு சிறப்பு பன்முக பயன்பாடுணீ கொண்ட தளமாக தன்னை நிலைநாட்டி யுள்ளது. ஈசி ட்ரைவ் என்பது தேவை அடிப்படை ஓட்டுநர் சேவைக்கான இந்தியாவின் முதல் ஆன்லைன் புக்கிங் மற்றும் தானியங்கி குறுந் செய்தி உறுதிப் பாட்டு வசதி வழங்கும் ஒரு செயலியாகும். எங்களது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பான பயணத்திற்கு உறுதி செய்வதன் மூலம் அவர் களது நம்பகமான மற்றும் விருப்பத்திற்குரிய பயண பங்காளராக இருப்பதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என இந்நிறுவன நிர்வாக அதிகாரி இராம் பிராசாத் தெரிவித்துள்ளார்.